RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 98 | ஏப்ரல்.15 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “தொகுதி வரையறையால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டால்...” மோடிக்கு ஸ்டாலின் இறுதி எச்சரிக்கை

சென்னை: ஏப்.15-

“தமிழ்நாட்டை பாதிக்கும்படியோ, வட மாநிலங்களுக்கு அரசியல் வலிமையை கூட்டும்படியோ தொகுதி வரையறை நடந்தால் சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடு தன் எதிர்ப்பை கடுமையாக காட்டும். நீங்கள் இதுவரை பார்க்காத தமிழ்நாட்டை பார்க்க வேண்டியிருக்கும்” என முதல்வர் ஸ்டாலின் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்தது அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில், “தேர்தல் பிரசாரத்துக்காக, நிற்காமல் ஓடிக் கொண்டே இருந்தாலும், இந்தக் கடமையை தவிர்க்க முடியாது.

நாளை மறுநாள் ஏப்ரல் 16, நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் கூடுகிறது. கூடுகிறது என்று சொல்வதைவிட, தமிழ்நாடு மேற்கு வங்கத் தேர்தலுக்கு இடையில் வலுக்கட்டாயமாகக் கூட்டப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

‘Delimitation’ என்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக அரசியல் சட்டத் திருத்தத்தை இந்தத் தொடரில் ‘புல்டோஸ்’ செய்யப் போகிறார்கள். முதலில் இருந்தே இது பற்றி நாம் தொடர்ந்து எச்சரித்தோம். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் இருந்து, இதனால் பாதிப்படையவுள்ள மாநில முதலமைச்சர்களையும் முக்கியக் கட்சித் தலைவர்களையும் சென்னைக்கு அழைத்து, கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் நடத்தினோம்.

“மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துங்கள்; அளவாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைபிடியுங்கள்” என ஒன்றிய அரசு சொன்னதையெல்லாம் நாங்கள் கேட்டோம். சொன்னதை ஒழுங்காகச் செய்ததற்காகவே எங்களுக்குத் தண்டனை தருவீர்களா? “தென்மாநிலங்கள் பாதிப்படையாது” என நாடாளுமன்றத்தில் வைத்துப் பிரதமர் அவர்கள் உத்தரவாதம் தர வேண்டும் என்று கேட்டோம். பதில் இல்லை. இதுக்காகப் பல்வேறு கட்சி எம்.பி.க்கள் பிரதமரை நேரில் சந்தித்து முறையிட நேரம் கேட்டோம். அதுவும் கிடைக்கவில்லை.

இப்படி, நாம் சொன்ன எதையும் அவர்கள் காதில் வாங்காமல், திமுக மட்டுமல்ல; எந்தக் கட்சியோடும் எந்த மாநிலத்தோடும் எந்த ஆலோசனையும் நடத்தாமல், அவர்கள் இஷ்டத்துக்கு செய்யப் பார்க்கிறார்கள்.



நேற்று, மரியாதைக்குரிய அம்மையார் சோனியா காந்தி அவர்களும், நாம் கேட்கும் அதே கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்! பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் உள்ளிட்ட யாருக்குமே பதில் இல்லை!

இப்படி அவசரக அவசரமாக ‘Delimitation’ செய்ய நினைப்பது, பாஜக அரசின் அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல்! இன்னும் சொன்னால், மாநில உரிமைகளைப் படுகொலை செய்திருக்கிறார்கள். இந்த ‘Delimitation’-ஐ எப்படி செய்ய போகிறார்கள் என்று தெரியவில்லை. அந்தச் சட்டத் திருத்தம் என்ன என்பது பற்றி, இதுவரை எந்த விளக்கத்தையும் கொடுக்காமல் இருக்கிறார்கள்.

இவர்கள் இப்படி மறைத்து மறைத்துச் செய்கிறார்கள் என்றால், கண்டிப்பாக ஏதோ பெரிய ஆபத்து இருக்கிறது என்று, அனைவருக்குமே அந்தச் சந்தேகம் வலுவடைகிறது. தென்மாநில மக்கள் பெரும் அச்சத்தில் இருக்கிறார்கள். நான் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் , பிரதமர் மோடிக்கும், இந்த நேரத்தில் முக்கியமாக ஒன்று சொல்லிக் கொள்கிறேன்.

நடக்க இருக்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில், எங்கள் எம்.பி.க்கள் கலந்து கொள்வார்கள். தமிழ்நாட்டை பாதிப்பது போன்றோ, வடமாநிலங்களுக்கு அரசியல் வலிமையை மேலும் வாரி வழங்குவது போன்றோ, ஏதாவது நடந்தால், தமிழ்நாட்டில் இருக்கும் நாங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடே ஸ்தம்பிக்கும். தமிழ்நாடு தனது எதிர்ப்பைக் கடுமையாகக் காட்டும். ஒவ்வொரு குடும்பமும் தெருவில் வந்து உட்காருவோம். தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கும் என்னுடைய தலைமையிலேயே மிகப்பெரிய போராட்டம் நடத்துவோம்.

“இது தேர்தல் காலம்தானே!” “இவர்கள் கவனம் அதில்தான் இருக்கும்!” “நாம் டெல்லியில் சைலண்டாகத் தமிழ்நாட்டின் தொகுதி மறுவரையறை செய்து விடலாம்” என்று மட்டும் நினைக்கவே நினைக்காதீர்கள்.

சொல்லும் நான் தமிழ்நாட்டு முதலமைச்சர் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தின் தலைவர். நீங்கள் இதுவரை பார்க்காத தமிழ்நாட்டைப் பார்க்க வேண்டியிருக்கும். 50 கள், 60களில் பார்த்த பழைய திமுகவை இந்தியா மீண்டும் பார்க்க வேண்டியிருக்கும்.

“என்ன இவன் மிரட்டுகிறான்?” என்று நினைக்காதீர்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் அதை மிரட்டல் என்று நினைத்தாலும் எங்களுக்குக் கவலையில்லை. ஆம், தமிழ்நாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும் எச்சரிக்கை இது. தேர்தல், ஆட்சி அதிகாரம் இது எல்லாம் எங்களுக்கு இரண்டாம் பட்சம்தான். நாங்கள் சுயமரியாதைக்காரர்கள்! எங்களுக்குக் கொள்கைதான் முக்கியம்! மாநில உரிமைகள்தான் முக்கியம். அதுதான், அண்ணாவும் கலைஞரும் எங்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்ற உயிர்க் கொள்கை.

தமிழ்நாட்டுக்குத் தவறிழைத்துவிட்டு, வழக்கம்போல் சும்மா கடந்துசெல்ல நினைத்தால், நடப்பதே வேறு!. சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளில், அவர் மேல் ஆணையாகச் சொல்கிறேன். தமிழ்நாடு பாதிக்கப்பட்டால், இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துவிடுவோம். பிரதமர் மோடியே மீண்டும் சொல்கிறேன்... இது தமிழ்நாட்டில் இருந்து உங்களை நோக்கி விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை” என தெரிவித்துள்ளார்.

## மகளிர் இடஒதுக்கீடு : “இனியும் தாமதம் கூடாது” பிரதமர் மோடி

புதுடெல்லி: ஏப்.15-

நாடாளுமன்றம் உள்ளிட்ட மக்கள் மன்றத்தில் மகளிருக்கான இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையிலான அரசின் முனைப்பை நாடு முழுவதும் உள்ள பெண்கள் பாராட்டி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது: பல தசாப்தங்களாக நிலுவையில் இருந்து வந்த மகளிர் இடஒதுக்கீட்டை செயல்படுத்த அரசு உறுதியாக உள்ளது. 2029ல் நடைபெறவுள்ள மக்களவை தேர்தல் மற்றும் அதையடுத்த மாநில சட்டமன்றத் தேர்தல்களில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதை உறுதி செய்யும் முடிவை, நாடு முழுவதும் உள்ள பெண்கள் பாராட்டி வருகின்றனர்.



அடுத்த இரண்டு நாட்களில் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் கூடவுள்ளது. இதில் பெண்களுக்கான இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையை கொண்டுள்ளேன். இது தொடர்பாக அவையில் விவாதிக்க உள்ளோம். வளர்ந்த பாரத கட்டமைப்பு சார்ந்த பங்களிப்புக்கான வாய்ப்பாக இதை பெண்கள் பார்க்கின்றனர்.

நம் தேசத்தின் பெண்கள் பல்வேறு துறைகளில் தங்களது தடத்தை பதித்து வருகின்றனர். இசை, இலக்கியம், கலை, சினிமா, விளையாட்டு, புத்தொழில் என சாதனை படைக்கின்றனர். அது இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உத்வேகம் அளிக்கிறது. இந்த துறைகளை போலவே மக்கள் மன்றத்திலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இது தொடர்பான கருத்து பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது அதை அமல்படுத்தும் சூழல் உருவாகி உள்ளது. மகளிருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும்.

இந்த சட்டத்தை இயற்றுவதில் இனியும் தாமதம் ஏற்பட்டால் அது நம் தேச பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இந்த சட்டத்தை இயற்ற நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான பெண்களின் ஆசியை வேண்டுகிறேன். நீங்கள் அனைவரும் உங்களது உள்ளூர் எம்.பிக்களுக்கு வரலாற்று சிறப்புமிக்க இந்த நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கேற்குமாறு கோர வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## பராமரிப்பு பணிகளுக்காக பாம்பன் புதிய தூக்குப்பாலம் திறப்பு

ராமநாதபுரம், ஏப்.15-

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலின் நடுவே கட்டப்பட்டு உள்ள புதிய ரெயில் பாலத்தில் தற்போது பராமரிப்பு பணி நடந்து வருகிறது. இதனால் மதுரையில் இருந்து காலையில் ராமேசுவரம் புறப்படும் பாசஞ்சர் ரெயில் மண்டபம் வரை மட்டுமே இயக்கப்படுகிறது. மண்டபம் ராமேசுவரம் இடையே பகு தியாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதிய தூக்குப்பாலம் நேற்று திறந்து ஆய்வு செய்யப்பட்டது. ரோடு பாலம் உயரத்திற்கு நேற்று காலை சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக தூக்குப்பாலம் திறந்து ஆய்வு செய்யப்பட்டது. அப்போது தூக்குப்பாலத்தின் 2 பகுதியிலும் உள்ள இரும்பு ரோப் கம்பி உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பராமரிப்பு பணியில் ரெயில்வே பணியாளர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

110 ஆண்டுகளை கடந்த பழைய தூக்குப்பாலத்தை வெல்டிங் செய்து உடைத்து அகற்றும் பணி நடந்து வருவதால் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக தூக்குப்பாலம் திறக்கப்படாமல் இருந்த நிலையில் நேற்று ஆய்வுக்காக புதிய தூக்குப்பாலம் திறக்கப்பட்டதை பாம்பன் ரோடு பாலத்தில் நின்றபடி ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் பார்த்து ரசித்தனர்.

## “நிதியமைச்சர் பதவியிலிருந்து கீழே இறக்கப்பட்டது ஏன்?” பழனிவேல் தியாகராஜனுக்கு சுந்தர் சி கேள்வி

மதுரை; ஏப்.15-

‘‘ஒரு பாரம்பரிய குடும்பத்துக்கு தொடர்ந்து இரு முறை வாய்ப்பு கொடுத்தது போதும்’’ என்று மதுரை மத்திய தொகுதியில் பிரச்சாரம் செய்த அதிமுக கூட்டணி வேட்பாளர் சுந்தர் சி தெரிவித்தார்.

மதுரை மத்திய தொகுதியில் பிரச்சாரம் செய்த அவர், ‘‘மதுரை மத்திய தொகுதியில் கழிப்பிட அறைகள், சமுதாய கூடம், ரேஷன் கடைகள் கட்டியதை பழனிவேல் தியாகராஜன் சாதனையாக சொல்கிறார். ஒரு அமைச்சரின் சாதனையா இது? தான் படித்தவர், பண்பாளர் என்று கூறி கொள்ளும் அவர், மத்திய தொகுதிக்கு ஒரு அமைச்சராக எவ்வளவு நல்ல காரியங்கள் செய்திருக்கலாம். மீனாட்சியம்மன் கோயிலுக்கு எத்தனை ஆயிரம் கோடி ஜிடிபி மட்டும் வருகிறது.

அந்த கோயிலுக்கு எதுவும் செய்யாமல், கவுன்சிலர்கள் செய்ய வேண்டிய காரியங்களை இவர் செய்ததாக பெருமை கொள்கிறார். தான் கேட்கிற கேள்விகளுக்கு அவரால் நேரடியாக பதில் சொல்ல முடியவில்லை. மதுரை மாநகராட்சி சொத்துவரி முறைகேட்டில் சம்பந்தப்பட்ட மேயர் கணவர் பொன்வசந்ததிற்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு? அவரை போலீஸார் ஏன் கைது செய்தனர்? பதவியிழந்த இந்திராணியை மேயராக பதவியில் அமர வைத்தது யார்? மாநகராட்சி சொத்துவரி முறைகேட்டில் இவரது ஆதரவு கவுன்சிலர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள். சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெய் பாலாஜி யார்? அவர் யாருடைய வலது கை?.



வெளிநாட்டில் தலைமறைவாக சுற்றிக்கொண்டிருக்கிறாரே லட்சுமணன், அவர் யாருடைய ஆள்? இதற்கெல்லாம் பதில் சொல்லாமல் என்னை பற்றி தனி நபர் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறார்.

கபடதாரி, பச்சோந்தி, சினிமா சங்கி என்று என்னைப் பற்றி கூறுகிறார். என்னை கூத்தாடி என்கிறீர்கள். உங்கள் துணை முதல்வர் உதயநிதி, சினிமாவில் இருந்துதான் அரசியலுக்கு வந்துள்ளார். உங்களுக்கு தைரியம் இருந்தால் அவரை பார்த்து சொல்லுங்கள்.

வார்த்தைக்கு வார்த்தைக்கு படித்தவன், படித்தவன் என்று சொல்லிட்டு என்னை படிக்காதவன் என்று இகழ்கிறார். காமராஜர், எம்ஜிஆர், ஜெயலலிதா படிக்கவில்லை. ஏன் உங்கள் தலைவர் கருணாநிதிகூட படிக்கவில்லை. படிப்பு ஒருவரின் திறமையையும், தகுதியையும் நிர்ணயித்துவிடாது. ஒருவரின் செயல்பாடுகளும், நடத்தையையும்தான் அவரது தகுதியை நிர்ணயிக்கும். இதுவரை உங்களை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லாத நீங்கள், இப்போது எனக்கு மட்டும் ஏன் பதில் சொல்கிறீர்கள். ஏன் என்றால், நான் கேட்பது என்னுடைய கேள்வி அல்ல.

அது மதுரை மக்கள் உங்களை நோக்கி வைக்கும் கேள்விகள். படித்தவர், படித்தவர் என்று சொல்கிறீர்கள், பிறகு எதற்கு உங்களை நிதியமைச்சர் பதவியில் இருந்து தூக்கி சாதாரண துறைக்கு மாற்றினார்கள். அதற்கு பதில் இருக்கிறதா உங்களிடம்? ஏன் உங்களுக்கு தகுதியில்லை என்பதாலா?

ஒரு நிதிமைச்சராக, தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக ஐந்து ஆண்டுகள் இருந்துவிட்டு தொகுதிக்கு பெரிய திட்டங்களை கொண்டு வராமல் என்னை திட்டுகிறார்.

என்னை எவ்வளவு விமர்சித்தாலும் நான் உங்களை போல் விமர்சிக்க தயாரில்லை. நான் என்னுடைய படங்களில் நடிகர்களுக்கு எத்தனையோ பட்டபெயர்கள் வைத்துள்ளேன். பழனிவேல் தியாகராஜன் என்னை ‘சினிமா சங்கி’ என்று பட்ட பெயர் வைத்துள்ளார். திருப்பி உங்களுக்கு நான் பட்ட பெயர்வைப்பதற்கு ஒரு நிமிடம் ஆகாது. அந்தளவுக்கு தரம் தாழ்ந்து நான் போக மாட்டேன். படித்தவர், படித்தவர் என்று சொல்லிக் கொள்ளும் நீங்கள் உங்கள் படிப்புக்கு தகுந்தவாறு நடந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாற்றத்திற்கான நேரம் வந்துவிட்டது. ஒரு பாரம்பரிய குடும்பத்திற்கு தொடர்ந்து இரு முறை வாய்ப்பு கொடுத்தது போதும். முதல் முறை எம்எல்ஏ ஆக இருந்து இரண்டாவது முறை தேர்தலை சந்தித்தபோது எதிர்க்கட்சியாக இருந்ததால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றார். அது நியாயம். மீண்டும் அவருக்கு வாக்களித்து இரண்டாவது முறை ஜெயிக்க வைத்தீர்கள். தற்போது இரண்டாவது முறையாக வந்து நின்றபோது, நினைத்ததை செய்ய முடியவில்லை என்று நிற்கிறார்’’ இவ்வாறு அவர் பேசினார்.

## தங்கம் விலை சவரனுக்கு ரூ.1280 அதிகரிப்பு

சென்னை: ஏப்.15-

சென்னையில் இன்று (ஏப்ரல் 14) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 1280 ரூபாய் அதிகரித்து ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 760 ரூபாய்க்கும், கிராமுக்கு 160 ரூபாய் உயர்ந்து, 14,220 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை, 22 காரட் ஆபரண தங்கம் கிராம், 14,100 ரூபாய்க்கும், சவரன், 1,12,800 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிலோவுக்கு, 265 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று, தங்கம் விலை கிராமுக்கு, 40 ரூபாய் குறைந்து, 14,060 ரூபாய்க்கு விற்பனையானது.

சவரனுக்கு, 320 ரூபாய் சரிவடைந்து, 1,12,480 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி கிராமுக்கு, ஐந்து ரூபாய் குறைந்து, 260 ரூபாய்க்கு விற்பனையானது. கிலோவுக்கு, 5,000 ரூபாய் சரிவடைந்து, 2.60 லட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.

இந்நிலையில் (ஏப்ரல் 14) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 1280 ரூபாய் அதிகரித்து ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 760 ரூபாய்க்கும், கிராமுக்கு 160 ரூபாய் உயர்ந்து, 14,220 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளியும் உயர்வு

வெள்ளி விலை கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து 265 ரூபாய்க்கும், கிலோவுக்கு 5 ஆயிரம் ரூபாய் அதிகரித்து 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



## “இளைஞர்கள் அரசியலுக்கு வர தயக்கம்” - கார்த்தி சிதம்பரம்

மதுரை:ஏப்.15-

சிவகங்கை எம்பி கார்த்தி சிதம்பரம், 2000க்கு பிறகு பிறந்த இளைஞர்கள் பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு வருவதில் தயக்கம் காட்டுகின்றனர் என தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த அவர், வேலைவாய்ப்பு பற்றாக்குறை, பொருளாதார சவால்கள் மற்றும் புதிய அரசியல் கட்சிகளின் வரவு இந்தத் தேர்தலில் முக்கிய காரணிகள் ஆகும் என்றார்.

பெண்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி போன்ற திட்டங்களை “யுனிவர்சல் பேசிக் இன்கம்” எனக் கருதி, மக்களின் கைகளில் நேரடி பணப்புழக்கம் அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், தெருநாய்கள் தொல்லை உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டிய அவர், புதிய தலைமுறையை ஈர்க்க அரசியல் கட்சிகள் மாற்றம் அடைய வேண்டியது அவசியம் என்றார்.

## தேனியில் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

தேனி ஏப். 15-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம்,

தேனி அல்லிநகரம் நகராட்சிப் பகுதியில் வாக்காளர்களுக்கு, வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு

தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது.

அதன்படி 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் நிறைவுபெற்று,



வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டுள்ளனர். வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்வதற்கு ஏதுவாக இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் இறுதி செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்தில் உள்ள 198 ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள 2,56,529 வாக்காளர்கள் 199 பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 2,65,830 வாக்காளர்கள் 200போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 2,63,292 வாக்காளர்கள் 201 கம்பம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 2,55,888 வாக்காளர்கள் என மொத்தம் 10,41,539 வாக்காளர்களுக்கான வாக்காளர் தகவல் சீட்டுகள் வரப்பெற்று, சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடி நிலை (BLO) அலுவலர்கள் மூலம் வாக்காளர்களுக்கு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதனைத் தொடர்ந்து, இன்று தேனிஅல்லிநகரம் நகராட்சிப் பகுதியில் வாக்காளர்களுக்கு, வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேற்படி, வாக்காளர் தகவல் சீட்டில் மாநிலம், சட்டமன்றத் தொகுதி, வாக்காளர் பெயர், பாலினம், வாக்காளர் அடையாள அட்டை எண், தந்தையின் பெயர், வாக்குச் சாவடி விவரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் இடம்பெற்றுள்ளது. ஆனால் இந்த தகவல் சீட்டில் வாக்காளரின் புகைப்படம் இடம் பெறாது.

வாக்காளர் தகவல் சீட்டுடன் இந்திய தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள 12 மாற்று ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தினை பயன்படுத்தி வாக்களிக்கலாம். மேலும், வாக்குச்சாவடி அமைவிடம், பாகம், எண் மற்றும் வரிசை எண் போன்ற விவரங்களை வாக்காளர் தகவல் சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள QR Code-ä Voters Help App மூலம் ஸ்கேன் செய்து தெரிந்துக்கொள்ளலாம்.

அதனைத் தொடர்ந்து, பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் உள்ள பழனியப்பா நினைவு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வுகளில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டாட்சியர் (தேனி) சதீஸ்குமார், தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் செல்வி பார்கவி உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## காரைக்குடி தொகுதியில் த வெ க வேட்பாளர் பிரபுவுக்கு கிராமம்தோறும் அமோக வரவேற்பு

சிவங்கை, ஏப்.15-

சிவங்கை மாவட்டம்காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் டிகே பிரபு, செட்டியேந்தல், செய்யாநேந்தல், நெம்மேனி, மொன்னி கார்மாங்குடி, பணங்குளம், சேந்தனி, பப்பனி, சிறுவத்தி, செங்கற்கோவில், வெள்ளிக்கட்டி, கோபாலபுரம் (நாகமத்தி), சருகனி, திருவேகம்பத்தூர் மற்றும் முப்பையூர் உள்ளிட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த பிரச்சார பயணத்தின் போது கிராமம்தோறும் பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்று ஆதரவு தெரிவித்தனர். மேலும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இணைந்து டிகே பிரபுவுக்கு சிறப்பான வரவேற்பு அளித்து தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக பங்கேற்றனர்.இதனால் காரைக்குடி தொகுதி கிராமப்புறங்களில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. மேலும் வாக்கு வங்கி அதிகரித்து வருவதாகவும் கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்




## நாக்பூரில் நடைபெற்ற தேசிய அளவிலான ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை

பல்லாவரம் ஏப். 15-

தேசிய அளவிலான போட்டியில் வெண்கல பதக்கம் வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற தேசிய அளவிலான ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் நாடு முழுவதும் இருந்து நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். கடுமையான போட்டிகளை சமாளித்து சிறப்பாக விளையாடிய செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தை சேர்ந்த இனிய ஹர்ஷினி இந்த சிறுமி, தனது திறமையை நிரூபித்து வெண்கல பதக்கத்தை கைப்பற்றினார்.

உடல் எடையை குறைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் குத்துச்சண்டை பயிற்சியை தொடங்கிய இவர், தொடர்ந்து கடின உழைப்பும், பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலும் காரணமாக தேசிய மட்டத்தில் பதக்கம் வெல்லும் அளவுக்கு உயர்ந்துள்ளார்.

மேலும், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், தற்காப்பு கலைகள் பெண்களுக்கு மிகுந்த பாதுகாப்பையும் தன்னம்பிக்கையையும் அளிக்கும் என்பதற்கும் இந்த சாதனை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக பார்க்கப்படுகிறது.

வெற்றியைத் தொடர்ந்து சொந்த ஊர் திரும்பிய பல்லாவரத்தில் இனிய ஹர்ஷினிக்கு உறவினர்கள் மற்றும் ஊர் மக்கள் இணைந்து உற்சாக வரவேற்பு அளித்தனர். மேளதாளங்கள் முழங்க, ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்ட அவரை பாராட்டிய மக்கள், இனி வரும் நாட்களிலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

## திமுக வேட்பாளர் கே.எம்.ராஜு தேர்தல் பிரச்சாரம்மேற்கொண்டார்

குன்னூர் ஏப். 15-

நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோன்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் நகர் கிராமத்தில் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கே.எம்.ராஜு தேர்தல் பிரச்சாரம்மேற்கொண்டார்.இதில் திமுக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கூட்டணி கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



## நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியத்தில் ஜோலார்பேட்டை திமுக வேட்பாளர் தீவிர வாக்கு சேகரிப்பு

நாட்றம்பள்ளி : ஏப்.15-

திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் என்.கே.ஆர்.சூரியகுமார் தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் கே பந்தாரப்பள்ளி, பச்சூர், சுண்டப்பட்டி, பாறையூர், கொத்தூர் ஊராட்சி பகுதிகளில் மலர் தூவி பட்டாசுகள் வெடித்து கோலாகலமாக வரவேற்று, தீவிர வாக்கு சேகரித்து சிறப்பு உரையாற்றி வருகின்றனர். உடன் நாட்றம்பள்ளி ஒன்றிய குழு பெருந்தலைவர் வெண்மதி முனிசாமி, தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏலகிரி செல்வம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் சிங்காரவேலன், பேரூர் நகர இளைஞரணி அமைப்பாளர் ஸ்ரீ கீர்த்தி ராஜன், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டு வாக்குகள் சேகரித்தனர்

## குன்னூர் அருள்மிகு ஸ்ரீதந்தி மாரியம்மன் திருக்கோயில் திருத்தேர் திருவிழா

நீலகிரி, ஏப்.15-

நீலகிரி மாவட்டம் குன்னூரில் அருள்மிகு ஸ்ரீதந்தி மாரியம்மன் திருக்கோயில் திருத்தேர் திருவிழா மிக சிறப்பாக நடைபெற்றது.

திருத்தேரினை குன்னூர் நகர காவல் கண்காணிப்பாளர் ரவி வடம் மற்றும் குன்னூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் விஜயன் ஆகியோர் திருத்தேரினை வடம் பிடித்து துவக்கி வைத்தனர். திருத்தேர்விழாவிற்கு குன்னூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராம பகுதிகளில் இருந்து திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ தந்தி மாரியம்மனை தரிசித்தனர் பக்தர்களுக்கு அன்னதான பிரசாதாம் வழங்கப்பட்டது.

மாலை இன்னிசை கச்சேரி நடைபெற்றது. வெளி கிராமங்களில் இருந்து திருத்தேர்

விழாவினை காண வரும் பக்தர்களுக்கு குன்னூர் அரசு போக்குவரத்து கழகம் சார்பில் பேருந்துகள் இயக்கப ட்டன.தேர்திருவிழாவிற்கான



பாதுகாப்பு ஏற்பாடுகளை குன்னூர் நகர காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் குன்னூர் காவல் துறையினர் பாதுகாப் பு பணிகளை மிக சிறப்பாக மேற்கொண்டு இருந்தனர்.

## தேனி மாவட்டம் சமத்துவநாளினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், அவர்கள் தலைமையில் சமத்துவநாள் உறுதிமொழியினைஅரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்

தேனி ஏப். 15-

தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் சமத்துவ நாளினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங், தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழியினை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியலமைப்பின் தந்தை, சமூக சீர்திருத்தவாதி, சிறந்த சட்ட வல்லுநர் மற்றும் பொருளாதார நிபுணர் என பன்முகத்தன்மைக் கொண்டவர். சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றிய இவர், தீண்டாமைக்கு எதிராகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் போராடினார். அன்னாரின் பிறந்த நாளான 2022 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் ‘சமத்துவ



நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி இன்றையதினம் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், “சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்கு முறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி, ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய, நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில், சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,சக மனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும்,சகமனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்’’ என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத்பீடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் (பொ) .சுரேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# பாமக சார்பில் கீழ்கட்டளையில் வழக்கறிஞர் வெங்கடேசன் தீவிர வாக்கு சேகரிப்பு

பல்லாவரம் ஏப். 15-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கீழ்கட்டளை பகுதியில் சுற்றி உள்ள பிரச்சாரத்தை மேற்கொண்டார் அப்பொழுது உழவர் சந்தை அருகே பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் இரா.வெங்கடேசன் தலைமையில் இந்திய ஜனநாயக கட்சியை சேர்ந்த வேட்பாளர் வழக்கறிஞர் வெங்கடேசன் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அதில் ஒரு பகுதியாக கீழ்கட்டளையில் நடந்து சென்று இரட்டை இலை சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார் அப்பொழுது அவருடன் அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.தன்சிங், மாநில செயற்குழு உறுப்பினர் முன்னாள் கவுன்சிலர் ஜே.எம்.சேகர், மாநில பசுமை தாயகம் செயலாளர் ஐ.நா.கண்ணன், மாவட்டத் துணைச் செயலாளர் பூக்கடை முனுசாமி, மாவட்ட இளைஞர் சங்கத் தலைவர் எஸ்.பாலாஜி, பகுதி செயலாளர் ஜே.மதி, பகுதி இளைஞர் சங்கத் செயலாளர் எஸ்.ராமச்சந்திரன், வட்டச் செயலாளர்கள் நா.தனபால், வி.ஆனந்தன், ஏழுமலை, மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் இந்திய ஜனநாயக கட்சியின் உள்ளிட்ட ஏராளமான கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

# பெரியகுளம் தொகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவேன்;விசிக வேட்பாளர் பெ.சக்திவேல் வாக்குறுதி




தேனி ஏப்.15-

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சி பெரியகுளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகிறது. விசிக பொதுச் துணைப்செயலாளர் சக்திவேல் என்ற ஆற்றலரசு போட்டியிடுகிறார். பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் ஏப் 13 அன்று கெங்குவார்பட்டி,காமக்காபட்டி,மஞ்சளார் அணை,செசங்குளத்துப்பட்டி,சாத்தா கோவில்பட்டி ,பாலார்பட்டி,கோட்டார்பட்டி,அட்டணம்பட்டி மற்றும் தேவதானப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்கு ஈடுபட்டார்.அப்போது வாக்காளர் மத்தியில் பேசும்போது"தமிழ்நாட்டில் மு.க ஸ்டாலின் தலைமையினாலான ஆட்சி சிறப்பாக உள்ளது.இந்த ஆட்சியை மீண்டும் தொடர அனைவரும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்.நான் விசிக சார்பில் பெரியகுளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகிறேன்.இந்த தொகுதியில் ஏற்கனவே பல திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தி உள்ளது.சில இடங்களில் செயல்படுத்தாத கிராமங்களில் பொதுமக்களின் அடிப்படை பிரச்சினைகளான குடிநீர்,கழிப்பிடம் மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்தி தருவேன்"ஆகவே எனக்கு பானை சின்னத்தில் வாக்களித்து என்ன வெற்றி பெற செய்வீர்கள்" என நம்புகிறேன் என்று பேசினார்.இந்த பிரச்சாரத்தின் போது கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எல்.மூக்கையா,பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார்,பெரியகுளம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் முத்துராமலிங்கம்,பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம் பாண்டியன், விசிக பெரியகுளம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் சுசி தமிழ் பாண்டியன், கெங்குவார்பட்டி பேரூர் திமுக செயலாளர் தமிழன்,தேவதானப்பட்டி பேரூர் விசிக செயலாளர் ராமகிருஷ்ணன், தேவதானப்பட்டி பேரூராட்சி முன்னாள் சேர்மன் குணா ஸ்டாலின்,தேனி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிஷாந்த்,தேனி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார்,மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் கலையரசி,முன்னாள் மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஸ்டுடியோ ரமேஷ் உள்பட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# நல்லாட்சி தந்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஆதரவு தாருங்கள் பர்கூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டி.மதியமுகன் பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.15-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட வெப்பாலம்பட்டி, போச்சம்பள்ளி, புளியம்பட்டி ஊராட்சிகளுக்கு உட்பட்ட 18 கிராமங்களில் தி.மு.க. வேட்பாளர். மதியழகன் எம்.எல்.ஏ. பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:தமிழ்நாடு கடந்த 5 ஆண்டுகளில், கல்வி, தொழில், சுகாதாரம், அடிப் படை கட்டமைப்பு என பல்வேறு துறைகளில் முதல்இடத்தை பிடித்து முன்னேறியுள்ளது. அத்தகைய சிறப் பான ஆட்சி தந்த முதல்வர் ஸ்டாலினின் திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்றன. தற்போது, திராவிட மாடல், 2.0 ஆட்சி வந்தவுடன் நிறைவேற்றும் திட்டங்களும் வாக்குறுதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. காலை உணவுத்திட்டம், தமிழ்புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன், மாணவர்களுக்கு லேப்டாப், அன்புகரங்கள், மக்களை தேடி மருத்துவம்,மகளிர் விடியல் பயணம்,

உரிமைத்தொகை, மாநிலத்தி லேயே அதிகமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 85 ஆயிரம் பேருக்கு பட்டா எனதிட்டங்களை வழங்கியமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நமது ஓட்டா, மத்தியபா.ஜனதா அரசின் அடிமையாக உள்ள கூட்டணிக்குநமது ஓட்டா என மக்கள்சிந்தித்து பார்த்து ஓட்டளிக்கவேண்டும். வரும், சட்டசபைதேர்தலில், 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில், தி.மு.க.கூட்டணி வென்று சாதனைபடைக்க வேண்டும். நல்லாட்சி தந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும்

தமிழக முதல் அமைச்சராகவர வேண்டும். அதற்காகஅனைவரும் பாடுபடவேண்டும். உங்களது வாக்குகளைஉதயசூரியன் சின்னத்துக்குதாருங்கள். இவ்வாறு அவர்பேசினார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு தேவையானஅனைத்து திட்டங்களையும் தந்த அ.தி.மு.க. ஆட்சி அமைய வாக்களியுங்கள்

## வேப்பனப்பள்ளி தொகுதி வேட்பாளர் கே.பி.முனுசாமி பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.15-

வேப்பனப்பள்ளி தொகுதிஅ.தி.மு.க.வேட்பாளர் கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. நேரலகிரி, கொத்தகிருஷ்ணப்பள்ளி, பாலனப்பள்ளி, சிகரலப்பள்ளி, குரியனப்பள்ளி,சின்ன பத்தலப்பள்ளி,பெரிய பத்தலப்பள்ளி, நல்லக்கட்டு, இடிப்பள்ளி, ஒட்டப்பள்ளி, பதிமடுகு, குடேகவுண்டனூர், கல்லமூர், ஒண்டியூர், குர்லப்பள்ளி, சின்ன



தீர்த்தம், தீர்த்தம் கொட்டாய், கே.என்.பேடூர்,அளேகுந்தாணி, தீர்த்தம்,கொரல் தொட்டி,தரணிசந்திரம், லட்சுமிபுரம உள்பட 25க்கும் மேற்பட் கிராமங்களுக்கு சென்று வாக்கு சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது: கடந்த 2004ல் அ.தி.மு.க. ஆட் சியில் தான் தர்மபுரி ஒருங்கிணைந்த மாவட்டத்தில் இருந்து கிருஷ்ணகிரி `மாவட்டத்தை பிரித்து தனி மாவட்டமாக அறிவித்தது அன்றைய முதல்அமைச்சர் ஜெயலலிதாதான். இந்த மாவட்டத்திற்கு தேவையான அனைத்து திட்டங்களையும் வழங்கியது அ.தி.மு.க. அரசு தான். கிருஷ்ணகிரி மாவட்டம் போலுப்பள்ளியில் ரூ.350 கோடியில்அரசு மருத்துவக் கல்லூரிமருத்துவமனை, பாலிடெக்னிக், தொழிற்சாலைகள்என அனைத்து திட்டங்களையும் தந்தது அ.தி.மு.க.,

மாணவர்களுக்கு விலையில்லா சைக்கிள், மடிக்கணினி, பெண்களுக்குதாலிக்கு தங்கம், ஸ்கூட்டி,ஏழை மக்கள் பசியாறஅம்மா உணவகம் தந்தது அ.தி.மு.க. அரசுதான். இந்த திட்டங்களை எல்லாம் நிறுத்தி விட்டு தி.மு.க.வினர் மாதம் ரூ.1,000 தருகிறோம் என பேசுகிறார் கள். மீண்டும் ஜனநாயகம் மலர்ந்திடலஞ்சம், லாவண்யம் அற்ற ஆட்சி அமைந்திட மக்கள் பாதுகாப்புடன் வாழ்ந்திட, பெண்களுக்குவளர்ச்சிதிட்டங்கள் கிடைக்க அ.தி.மு.க.வுக்கு வாக்களியுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.



■ சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி தாலுகா அலுவலகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு அதிமுக துணை பொதுச்செயலாளரும், வேப்பனப்பள்ளி தொகுதி வேட்பாளருமான கே பி முனுசாமி எம் எல் ஏ மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கிருஷ்ணகிரி தொகுதி அதிமுக வேட்பாளர் அசோக் குமார் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.




# மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்அமைச்சராகதி.மு.க. கூட்டணியில் கை சின்னத்துக்கு வாக்குகளை தாருங்கள்கிருஷ்ணகிரியில் டாக்டர் செல்லகுமார் பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.15-

கிருஷ்ணகிரி தொகுதி காங் கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லகுமார் தீவிரமாக வாக்கு சேகரித்து வருகிறார். அந்த வகையில் கிருஷ்ணகிரி ஒன்றியம் கல்லுகுறுக்கி, தர்ம ராஜா நகர், சின்னமேலுப் பள்ளி, கொத்தபேட்டா, லைன் கொள்ளை உள்பட 30 கிராமங்களில் கை சின்னத்திற்கு ஓட்டு கேடு தீவிர பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காமராஜரைப் போல் மாணவ, மாணமைத்தொகையை ரூ.2 ஆயி ரமாக உயர்த்தி தேர்தல் அறிக்கை வெளியிட்டுள் ளார். முதல் அமைச்சரின் புதுமைப் பெண் திட்டத் தில், உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோ றும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படுகிறது. தமிழ்ப் புதல்வன் திட்டத்தில், உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படுகிறது. இது போன்ற எண்ணற்ற திட்டங்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியுள்ளார். எனவே அவரை மீண்டும் முதல் அமைச்சராக வேண்டும் என்றால் இந்ததொகுதியில் போட்டியிடும் எனக்குகை சின்னத்தில் ஓட்டு அளித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



■ தேமுதிக கேப்டனின் ஆசி பெற்ற வேட்பாளர் எஸ். நாகஜோதி அவர்களுக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் நிலக்கோட்டை தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் ஜி செல்வம் ஒன்றிய இளைஞரணி .கி. கோபால் எஸ் நாகஜோதி அவர்களுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்




■ தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு, 52.பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கந்திகுப்பம் ஊராட்சி, காமராஜ் நகரில், 85வயதுக்கு மேற்பட்டவர்களின் வீட்டிற்கே நேரடியாக சென்று வீட்டிலிருந்தபடியே தபால் வாக்கு செலுத்தும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அபிநயா, வட்டாட்சியர் சின்னசாமி, துணை வட்டாட்சியர் (தேர்தல்) அம்மு உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# புழல் 24வது மேற்கு வட்டகழகத்தில் அதிமுக வேட்பாளர் வி.மூர்த்திக்கு பிரம்மாண்டமான வரவேற்ப்பு

மாதவரம், ஏப்.15-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளருமான வி.மூர்த்தி திறந்த வேனில் புழல் 24வது வட்டகழகத்தில் உள்ள வாக்காளர்களிடம் இரட்டைஇலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். அப்போது 24வது வட்டகழ செயலாளர் எஸ்.விஜயன் ஏற்பாட்டில் பட்டாசு வெடித்து வேட்பாளருக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்தும் மலர்கள் தூவி பெண்கள் திரளாக கலந்துகொண்டு ஆர்த்தி எடுத்து பிரம்மாண்டமாக வரவேற்ப்பு அளித்தனர். இதில் பூத் நிர்வாகிகள் ஈ.செல்வம்,எஸ்.பச்சையம்மன், எம்.ராஜ்குமார், டி.நரேந்திரன், வி.பரமேஸ்வரன், எம்.சி.சேகர்,எம்.அன்புகுமார், எஸ்.கலையரசன், ஐ.எஸ்.செழியன், எஸ்.கமல்ராஜ், பி.தாஸ், என்.கருணா உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.






# கீழக்கோட்டையில் மாணவர்களுக்கு குழந்தைகள் துளிர் வழங்கும் விழா மற்றும் தேர்தல் விழிப்புணர்வு

காளையார் கோவில் ஏப்.15-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் மாணவ மாணவிகளுக்கு குழந்தைகள் துளிர் வழங்கும் விழா மற்றும் தேர்தல் விழிப்புணர்வு நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கொட்டக்குடி கிராம நிர்வாக அலுவலர் செங்கதிர் செல்வன் வருகைபுரிந்து தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக மாநிலயளவில் தேர்வு எழுதிய மாணவ மாணவிகளுக்கு குழந்தைகள் துளிர் மாத சிறுவர் இதழ்கள் சான்றிதழ்களை வழங்கினார். மாணவர்களிடையே தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர் அவர்களின் பெற்றோர்களிடமும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடமும் ஏப்ரல் 23 ஆம் தேதி அன்று ஓட்டுரிமை பெற்றுள்ள அனைவரையும் ஓட்டுப் சாவடிக்கு சென்று 100% வாக்கை பதிவு செய்து கடமையாற்றக் கேட்டுக் கொண்டார். கிராம உதவியாளர் ராமதிலகம் கணினி பயிற்றுநர் வித்யா வாழ்த்துரை வழங்கினர். மாதிரி வாக்குப் பதிவிற்கான குறுஞ் செய்திகளை வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் செங்கதிர் செல்வன் ராமதிலகம் சரண்யா ஆகியோர் அனுப்பினர். ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார்.




# "தபால் வாக்கில் குளறுபடி, ₹8000 கூப்பன் ஏமாற்று!" – நிர்மல் குமார் குற்றச்சாட்டு

மதுரை:ஏப்.15-

தமிழக வெற்றிக்கழக இணை பொதுச்செயலாளர் மற்றும் திருப்பரங்குன்றம் தொகுதி வேட்பாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார், தனக்கன்குளம் அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.85 வயதுக்கு மேற்பட்டவர்களின் தபால் வாக்கு பதிவில் குளறுபடிகள் நடைபெற்றுள்ளதாகவும், திமுக கூட்டணிக்கு வாக்களிக்க அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் வீடியோ ஆதாரத்துடன் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிப்போம் என்றார்.மேலும், சில இடங்களில் ₹8000 கூப்பன் வழங்கி மக்களை ஏமாற்ற முயற்சி நடைபெறுகிறது என குற்றம்சாட்டிய அவர், "மக்கள் விழிப்புணர்வுடன் உள்ளனர்; எந்த டோக்கனும் வாங்கினாலும் எங்களுக்கே வாக்களிப்போம் என கூறுகின்றனர்" என்றார்.

தொகுதியில் ஆட்சி மாற்றத்திற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகவும், பாதுகாப்பு ஏற்பாடுகள் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



■ சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் தொகுதி வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ தலைமையில் கிருஷ்ணகிரி தாலுகா அலுவலகத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். கிருஷ்ணகிரி தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர்.செல்லகுமார் உள்ளிட்ட மதசார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# பம்மல் தெற்கு பகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சிகளின் சட்ட மன்ற தேர்தல் பணிமனை திறப்பு விழா

பம்மல் ஏப்.15-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் தெற்கு பகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சிகளின் சட்ட மன்ற தேர்தல் பணிமனை திறப்பு விழா 12/04/2026 அன்று பம்மல் மெயின் ரோடு பம்மல் வே.கருணாநிதி பம்மல் தெற்கு பகுதி செயலாளர் 1வது மண்டலம் குழு தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் ப.காளேஸ்வரன் துரைஇளங்கோவன் என்.பன்னீர்செல்வம் பா,கவிதா ஆர்.உமாசங்கர் பி.ஜே.வேந்தன் பா.டில்லி சு.மனோகரன் என்.கே.ரவிசந்திரன் இரா.கந்தவேலு ரா.கோகுல் முன்னிலை வகித்தனர் வி.எஸ்.ஜெகன்நாதன் 6 வது வ.செ கல்யானி டில்லி வரவேற்புரை ஆற்றினர் தா.மோ.அன்பரசன்காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர்,குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார் உடன் மதசார்பற்ற முற்போக்கு கூட்டனி பல்லாவரம் தொகுதி வேட்பாளர் அனகை டி.முருகேசன் மா.செ மா.வை.மகேந்திரன் தமிழரசன் எஸ்.முகமது பேக் கமல்கணேஷ் த.ஜெயகுமார் ஜி.காமராஜ், பாண்டியன் இரா.தருண்சுந்தர் என்.கோபி கு.பிரவீன் குமார் டி.வின்செண்ட், சரவணன் பி.குமார் ஏ.ராஜேந்திரன் தாமு எம்.முபாரக் சாதிக்பாஷா உதயச்சந்திரன் கருணாகரன் எஸ்.குமார்

பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன் சத்திய பிரபு மு.இன்பசேகர், ரம்யா சத்திய பிரபு, மதினா பேகம், சத்யா மதியழகன், ஏ.அனிஸ்டன் என்.காந்தி முகமது அப்பாஸ் எம்.சுகுமாரன் ப.ஶ்ரீதரன் கலந்து கொண்டனர் இறுதியாக செ.அமிர்தராஜ் நன்றியுரை உரையாற்றினார்.





■ நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி முசுவனத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளை மக்களிடம் கூறி வாக்குகள் சேகரித்தார் கழக வேட்பாளருக்கு மேற்கு ஒன்றிய செயலாளர் கரிகால பாண்டியன் எஸ் நாகஜோதிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர் விடுதலை சிறுத்தைகள்மைய மாவட்ட செயலாளர் பிரகாஷ் முசுவனத்து ஊராட்சி செயலாளர் வீரபாண்டி திமுக பொறுப்பாளர் பெரிய கருப்பன் அறிவுசிங்கராஜ் மிளகாய் பட்டி ஊராட்சி செயலாளர் கணேசன் முத்துகாமன்பட்டி ஊராட்சி செயலாளர் அன்பு மற்றும் பலர் கலந்து கொண்டனர்



■ திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து அவருடைய வாரிசுகளான மகள் டாக்டர் விஸ்வ லட்சுமி மற்றும் மகன் சக்தி ஆகியோர் பூரிகாமணிமிட்டா ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். உடன் பூரிகாமணிமிட்டா ஊராட்சி மன்றத் தலைவர் பரமசிவம், மு.ஊ.ம தலைவர் மகாராஜன், திமுக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்து வருகின்றனர்.

# திமுக அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசு நினைவேந்தல் நிகழ்ச்சி

## அமைச்சர் பெரியகருப்பன் . தென்னவன். மருது அழகுராஜ். சேங்கைமாறன் . சுப.மதியரசன். பள்ளத்தூர் ரவி . குணசேகரன் . மும்பை ஜேசுராசு பங்கேற்பு

சிவகங்கை ஏப்.15-

சிவகங்கை மாவட்டம் சிறுகதை மன்னன். சேது நாட்டு செல்லக்கிளி. திருக்கோட்டியூர் எஸ்.எஸ். தென்னரசு அவர்களின் 35 வது நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது...

தென்னரசு குடும்பத்தினர் முன்நின்று நடத்திய இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் . சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு. தென்னரசுவின் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்...



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகேயுள்ள திருக்கோட்டியூரில் 20.2.1929ல் சொக்கலிங்கம் தங்க அழகு இணையரின் மகனாகப் பிறந்தவர் தான் கோட்டியூர் எஸ்.எஸ். தென்னரசு ...

இயற்கையிலேயே பகுத்தறிவு சிந்தனையும் கவித்துவத்தையும் விரும்பும் தென்னரசு இளவயது பள்ளிப் படிப்பை முடித்து தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரின்பால் கொண்ட அன்பின் மிகுதியால் தன்னை திமுக வில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றி வந்தவர்... பிரபல எழுத்தாளராக அறியப்பட்டவர்...

தற்போதைய திருப்புத்தூர் தொகுதி அப்போதைய திருக்கோட்டியூர் தொகுதியில் 1989 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றினார்...

திமுகவின் கழக மேனாள் அமைப்புச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்...

பின்னர் இவரது கவிதை சிந்தனைகளை உற்று நோக்கிய டாக்டர் கலைஞர் இவரைப் பாராட்டி சிறைப்பறவை . சேது நாட்டு செல்லக்கிளி. மற்றும் சிறுகதை மன்னன் என அன்போடு அழைக்கப்பட்டவர்...

மேலும் தமிழ்நாடு அரசு இவரது படைப்புகளான சிறுகதைகள்.

நாவல்கள் . திராவிட இயக்க நூல்கள். தொகுப்புகள். நூல்களான அவள் ஒரு கர்நாடகம் . பாடகி . செம்மாதுளை . பெண்ணில்லாத ஊரிலே . மலடி பெற்ற பிள்ளை . உள்ளிட்ட இவரது படைப்புகளான நூல்களையும் தமிழ்நாடு அரசு அரசுடைமையாக்கி பெருமை சேர்த்துள்ளது ...

மேலும் இவரது அரசியல் பணியின் போது தமிழ்நாடு அரசின் சார்பில் கலைமாமணி விருதினை 1990 1991 காலகட்டத்தில் வழங்கி பிறப்பிக்கப்பட்டது... கடந்த 1991 ஏப்ரல் 13 ந்தேதி வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்திவிட்டார்...

இதனிடையே ஐயா தென்னரசுவின் நினைவேந்தல் நிகழ்ச்சியானது தொடர்ந்து வருடா வருடம் தொய்வின்றி நடைபெற்று வருகிறது...

தென்னரசு வின் நினைவிடத்தில் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்..

மாவட்ட திமுக விவசாய அணித் தலைவரும் தென்னரசு வின் உடன்பிறந்த இளைய சகோதரருமான எஸ்.எஸ். அருணாச்சலம் .

மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் திருக்கோட்டியூர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் மற்றும் மருமகன் நமக்கோட்டி . திருக்கோட்டியூர் நகரச் செயலாளர் கார்த்திகேயன். உள்ளிட்ட ஐயா தென்னரசு வின் உறவினர்கள் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் தென்னவன். மாவட்ட திமுக துணைச் செயலாளர்கள் சேர்மன் சேங்கைமாறன் . ஜோன்ஸ் ரூஸோ . கழக மாநில செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் மருது அழகுராஜ். தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே எஸ்.ரவி ,மதிமுக செவந்தியப்பன் . வணக்கத்திற்குரிய காரைக்குடி மேயர் . மாநகர திமுக செயலாளர். நா.குணசேகரன் . ஒன்றிய கழக செயலாளர்கள் சட்டமன்ற மேனாள் உறுப்பினர் சுப.மதியரசன். சண்முகவடிவேல். வே.தமிழ்மாறன். ஏனாதி கடம்பசாமி. நகரச் செயலாளர் க.பொன்னுச்சாமி . பேரூராட்சி சேர்மன் கோகிலாராணி நாராயணன். மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட மகளிரணி பவானி கணேசன். மாவட்ட இளைஞரணி மணலூர் கே.எம்.பொற்கோ கொத்தமங்கலம் சேது. கே.எஸ்.நாராயணன் மாவட்ட வர்த்தக அணி ஆர்.தனசேகரன். காளையார்கோவில் தெற்கு துணைச் செயலாளர் தொழிலதிபர் கோலாந்தி கோதண்டபாணி. சங்கங்குளம் ஈஷ்வரன். அண்ணாமலை. . அண்ணாமலை. பொருளாளர் சொட்டதட்டி சக்திமுருகன் . மார்கரேட் கமலா பத்தினாதன். தேளி கோபால் . காரை தமிழ் நம்பி . ஏடிஎன்ஆர்.தங்கமணி மாவட்ட விவசாய அணி காளிமுத்து. புலிக்குட்டி ஐடி விங் கண்ணன் . மடப்புரம் ஜெயக்கொடி. பாலகிருஷ்ணன்.தேவாரம்பூர் இராமநாதன். திருப்புத்தூர் ரமேஷ் உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஐயா தென்னரசு குடும்பத்தினர் காலைச சிற்றுண்டி வசதிகள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்...

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161